முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் யோகானந்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

28.10.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **கனிகிரி வேலவன் சக்தியே**
**கருணை வடிவாக வந்து**
**இனிமைபட ஞான சக்தியாக**
**ஏழாம் படை வீடு படைத்த அண்ணலே**
2. அண்ணலே ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
நன்னயமாய் ஒளி சூட்சும நூலை
நாட்டிட **விளம்பி துலை திங்கள்**
3. **திங்களிலே லாப திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு யோகானந்தர் யானும்**
**இங்கனமே உலகநலமுற உரைப்பேன்**
**இயம்பிடுவேன் சுத்தநெறி ஏற்று**
4. ஏற்றுமே சன்மார்க்க வழிமுறை
எல்லோரும் ஏற்று வருக
உற்றதொரு உயர்வு காணும்
உலகமே தருமநெறி பரவி
5. பரவி அரங்கனே ஞான
பரமானந்த குரு என்னும்
பூரண ஞான மேல்நிலை கண்டு
பூவுலகோர் அரங்க ஞானி தயவுபட
6. தயவுபட கலியுகம் தேறும்
தாமுரைப்பேன் மக்களின் மனபலம்
தயவுமிக்கதாக மாறி நன்கு
தணிகைவேலன் ஆளுமை காணும்
7. காணவே கட்டாயம் உலகோர்
கண்டுரைப்பேன் துறையூர் வாழ்
ஞானதேசிகன் பிரணவக் குடிலை
நல்கி முழுமதி பூசை கலந்து
8. கலந்துமே அரங்கமகானின்
கருணைமிகு தீட்சை ஏற்று
வலம் வர ஏழாம் படை வீட்டை
வணங்கிவர அரங்கன் சபையை
9. சபையை சார்ந்து வாழ
சரணாகதி கண்டு தொடர
அபயமென அரங்கனுடன் இருக்க
அனைவருக்கும் பாதுகாப்பு கூடி

10. கூடியே அழிவு துன்பமில்லா
குளறுபடி வஞ்சம் பிணி இல்லா
தேடியே ஆறுமுகன் துணைபட
தெரிவிப்பேன் உலகோர் சிறப்பர்

11. சிறப்பு தரும் ஞானியே வாழ்க
செயமருளும் தவசியே வாழ்க
மறுப்பிலா உன் மார்க்கமே
மண்ணுலகை மாற்றும் சன்மார்க்கம் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

### மகான் யோகானந்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

பழனிமலை வாழ் வேலவன் முருகப்பெருமானின் சக்தி வடிவமே கருணையே வடிவமாக வந்துதித்து இனிமையுடன் உலகம் காத்திட ஞானசக்தியாக ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை படைத்திட்ட அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் உமது பெருமைகளை கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே யோகானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் யோகானந்தர்.

உலக மக்கள் உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்தசைவ உணவினை மேற்கொண்டு சன்மார்க்க வழிமுறைகளை அனைவரும் ஏற்றுக் கொண்டு நடந்து வரவர, அவர்களது கன்மங்கள் போக்கிட அரங்கமகா தேசிகனே அரங்கா எம்மைக் காப்பாய் என மனம் உருகி வேண்டி வரவர, உலகமே தயவுமிக்க முருகப்பெருமானின் அருள் பெருகி பூரண மேல்நிலைதனை அடைந்து சிறப்பர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞான பரமானந்த ஞானகுரு என்கிற பரமானந்த குருவின் திருவடி பற்றி ஏற்று வணங்கி வர, அவரெல்லாம் பூரண பரமானந்த சற்குரு அரங்கன் ஆசி பெற்று அரங்கன் தரும நெறியை பரப்பிவர அரங்கனே ஞானகுரு பரமானந்த குரு என்கிற பூரண ஞான மேல்நிலைக் கண்டு உலக மக்களெல்லாம் அரங்கனின் தயவைப் பெற்று இந்த கலியுகமே மாற்றம் அடையும், நாடு முருகப்பெருமான் ஆட்சியை அடைந்து மக்களின் மனோபலம் பெருகி தயவுமிக்க நல்லுலகமாக மாறி கலியுகம் தேறிடும், முருகப்பெருமானின் ஆட்சியை காணும்.

ஆதலினால் உலக மக்களெல்லாம் கட்டாயம் தர்மங்களை செய்வதுடன் அரங்கன் உலக நலன் கருதி செய்திடும் ஞானபூஜைகளில் கலந்து கொண்டு ஆங்கே வீற்றிருக்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து தீட்சை உபதேசம் அடைந்து அரங்கனை தொடர்ந்து வரவர, ஏழாம் படை வீட்டினை வணங்கி வரவர, ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை வணங்கி வரவர, அரங்கன் தலைமையை சார்ந்து வாழ, அரங்கன் திருவடிகளில் சரணாகதி அடைந்து வாழ, அரங்கனே அபயம் என அரங்கனை பயபக்தியுடன் பணிந்து வாழ, அனைவருக்கும் பாதுகாப்பு கூடி துன்பமில்லாத வாழ்வு உண்டாகும், குளறுபடிகள் நீங்கும், வஞ்சம் விலகிடும், நோய்கள் விலகும். ஆறுமுக அரங்கனின் துணையுடன் உலக மக்கள் சிறப்படைவார்கள்.

சிறப்புகளை தந்தருளும் மகா ஞானி அரங்கனே வாழ்க வாழ்க.

எல்லா வெற்றிகளையும் தந்தருளும் மகா தவசியே வாழ்க வாழ்க. அரங்கா உமது மறுப்பில்லாத உயர் ஞான மார்க்கமாம் தூயநெறியே இவ்வுலகினை மாற்றும் சன்மார்க்க நெறியாகும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் யோகானந்தர்.

–சுபம்–